**Deposition of Witness**

**(Chapter XXXIII Code of Criminal Procedure )**

**In the Court of Judicial Magistrate No.III Cuddalore.**

| | |
|---|---|
| Case Number | : C.C.No.24 /2015 |
| Police Station | : Thiruppapuliyur |
| Deposition of witness for Prosecution | : LW4/ PW4 |
| Name | : தனஞ்செழியன் |
| Father Name/Husband Name | : தங்கமணி |
| Village | : |
| Cuddalore | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 28.06.2022

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கிறிஞர் ஆஜர்.

**முதன்மை விசாரணை:-**

நான் தற்போது வி. காட்டுப்பாளையத்தில் வசித்து வருகிறேன். நான் அரசு பேருந்தில் நடத்துனராக பணிபுரிந்து வருகிறேன். நான் பணிபுரியும் அரசு பேருந்தின் எண் TN-32-N-3540 என்ற பேருந்தில் பணிபுரிந்து வருகிறேன். அதே பேருந்தில் ஓட்டுநராக தர்மராஜ் பணிபுரிந்தார். 2013ம் வருடம் மாலை 06.50 மணியளவில் விருத்தாச்சலம் செல்வதற்காக நாங்கள் பேருந்தை வெளியே எடுத்து வடக்கிலிருந்து தெற்கு நோக்கி மோகினி பாலம் அருகே சென்றபோது எதிரே வந்த இருசக்கர வாகனத்தில் வந்தவர் மேற்கு பக்கமாக வராமல் கிழக்கு பக்கமாக வந்ததால் இருசக்கர வாகனத்தில் வந்தவர் பேருந்தின் மீது மோதிய சத்தம் கேட்டது. நான் இறங்கி சென்று பார்த்தேன். பிறகு விபத்து நடந்தது சம்மந்தமாக கிளை மேலாளருக்கும் போலிசாருக்கும் தகவல் சொன்னேன். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசுதரப்பில் சாட்சி பகுதி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிகேட்டு அனுமதி அளிக்கப்பட்டது.**

கடந்த 2013 ம் வருடம் மாலை 06.50 மணியளவில் கடலூர் பேருந்துநிலையத்திலிருந்து கடலூர் மோகினி பாலம் அருகே வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஓட்டிச்செல்லும்போது அரசு பேருந்தின் ஓட்டுநர் கவனக்குறைவாக ஓட்டியதால் எதிர் புறத்தில் வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதியதால் விபத்து ஏற்பட்டது என்றும் நான் கீழே இறங்கி பார்த்தபோது இருசக்கர வாகனத்தில் அடிப்பட்டவர் அரியாங்குப்பத்தை சேர்ந்த ஓம்சக்திவேல் என்று தெரிந்துக்கொண்டேன் என்றும் அவர் பலத்த அடிப்பட்டு சம்பவ

இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும் இந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்து விட்டு போலிசாரிடம் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது முதல் விசாரணையில் எதிரியான தர்மராஜால் விபத்து ஏற்படவில்லை என்றும் விபத்தில் இறந்துபோன நபரால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் எதிரி தன்னுடன் பணிபுரியும் சகஊழியர் என்பதால் அவரை காப்பாற்றுவதற்காக பகுதி பிறழ்சாட்சியாக மாறி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இல்லை என்று கூறப்பட்டது.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me Certified that contains a true and correct statement made by the Accused read over and admitted by the / him to the correct.

Sd- G. Ragothaman, M.A.L.L.B.,
Judicial Magistrate No.III,
Cuddalore.

## Deposition of Witness

**(Chapter XXXIII Code of Criminal Procedure )**

**In the Court of Judicial Magistrate No.III Cuddalore.**

Case Number : C.C.No.24 /2015
Police Station : Thiruppapuliyur
Deposition of witness for Prosecution : LW5/ PW5
Name : ரங்கநாதன்
Father Name/Husband Name : பெருமாள்
Village :
Cuddalore :
Taluk :
Caste :
Calling :
Religion :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 28.06.2022

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கிறிஞர் ஆஜர்.

**முதன்மை விசாரணை:-**

நான் தற்போது விருத்தாச்சலத்தில் வசித்து வருகிறேன். நான் அரசு போக்குவரத்து கழகத்தில் கட்டுக்காப்பாளராக பணிபுரிந்து 2016-ம் வருடத்தில் பணிஓய்வு பெற்று விருத்தாச்சலத்தில் வசித்து வருகிறேன். என்னுடைய பணிவேலை அரசு பேருந்தில் ஒவ்வொரு நாளும் யார் ஓட்டுநராகவும், நடத்துநராகவும் பணிபுரிவதற்கான பணிநியமன ஆணையை தருவது என்னுடைய பணி ஆகும். 14.08.2013 ம் தேதி நான் அரசு போக்குவரத்து கழகத்தில் பணியில் இருந்தபோது TN-32N-3540 என்ற அரசு பேருந்தில் ஓட்டுநராக கே.தர்மராஜ் அவர்களையும் நடத்துநராக பி.தனஞ்செழியன் அவர்களையும் நியமனம் செய்து பணிமனை ஆணை வழங்கினேன். எனது பணிமனை ஆணை அ.த.சா.ஆ.2 ஆகும். அந்த வாகனம் விபத்து ஏற்படுத்தியதாக எனக்கு தகவல் கிடைத்தது. இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இல்லை என்று கூறப்பட்டது.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me Certified that contains a true and correct statement made by the Accused read over and admitted by the / him to the correct.

Sd- G. Ragothaman, M.A.L.L.B.,
Judicial Magistrate No.III,
Cuddalore.